

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று சென்னை - அண்ணா அறிவாலயம் கழக அலுவலகத்தில் - விழுப்புரம் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற கழக வேட்பாளர் டாக்டர் இலட்சுமணன், வானூர் தொகுதி கழக வேட்பாளர் கௌதம் திராவிட மணி ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள். கழக துணைப் பொதுச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., கழக செய்தித் தொடர்புக் குழுத் துணைத் தலைவர் மருது அழகுராஜ் ஆகியோர் உடனுள்ளார்கள்.



குறிஞ்சிப்பாடி சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்றதற்கான சான்றிதழினை எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தேர்தல் நடத்தும் அலுவலர் திருமதி தனலட்சுமியிடம் நேற்று முன்தினம் (04.05.2026) பெற்றுக் கொண்டார்.



இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளராக போட்டியிட்ட இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம் வெற்றிச் சான்றிதழைப் பெற்றார்.




கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம் சட்டமன்றத் தொகுதியில் 3வது முறையாக வெற்றி பெற்ற கழக வேட்பாளர் வசந்தம் க.கார்த்திகேயனுக்கு வெற்றி சான்றிதழை ரிஷிவந்தியம் தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கினார். கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் உடன் உள்ளனர்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் ஜி.ஆர்.வசந்தவேலுவுக்கு வெற்றி சான்றிதழை உளுந்தூர்பேட்டை தேர்தல் நடத்தும் அலுவலர் வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணிக் கட்சிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் பலர் உள்ளனர்.




தென்காசி மாவட்டம் வாசுதேவநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் தென்காசி வடக்கு மாவட்டச் செயலாளரும் தி.மு.க. வேட்பாளருமான ஈ.ராஜா வெற்றி பெற்றார். அதற்கான சான்றிதழை தேர்தல் அலுவலர் பால்துரை வழங்கினார். உடன் மாநில மருத்துவரணி துணைச் செயலாளர் செண்பக விநாயகம், வழக்கறிஞர் அணி பிச்சையா, தி.மு.க. பிரமுகர் மூர்த்தி பாண்டியன் உள்பட பலர் உள்ளனர்.



விழுப்புரம் தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் டாக்டர் லட்சுமணன் தேர்தல் அதிகாரியிடம், வெற்றி பெற்றதற்கான சான்றிதழை பெற்றுக் கொண்டார்.




விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர் வன்னியரசு வெற்றிபெற்றதையடுத்து அவருக்கு திண்டிவனம் தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஆகாஷ் வெற்றி பெற்றதற்கான சான்றிதழை வழங்கினார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் ரமணன், மாவட்ட துணைச் செயலாளர் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர்கள் சொக்கலிங்கம், தயாளன், ஒன்றியச் செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், வி.சி.க. நிர்வாகிகள் சேரன், திலீபன், மலைச்சாமி உள்ளிட்ட தோழமைக் கட்சி நிர்வாகிகள் உள்ளனர்.



பரமக்குடி சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் திராவிட முன்னேற்றக் கழகம் சார்பாக போட்டியிட்ட வழக்கறிஞர் கே. கதிரவன் வெற்றி பெற்று வெற்றி சான்றிதழ் பெற்றார்.



காரைக்கால் தெற்கு தொகுதியில் வெற்றி பெற்ற கழக வேட்பாளர் நாஜிம் தேர்தல் அதிகாரி பூஜாவிடம் அதற்கான சான்றிதழைப் பெற்றார்.